## தங்காலை பிரதேச சபை
## அம்பாந்தோட்டை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தம்பர் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தங்காலை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழ்வரும் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய வழங்கல்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,044,591 இனால் குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 80,000 இனால் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) i. கட்டிட நிர்மாணம் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,965,731 கூட்டுத்தொகையான செலவினங்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தது.
ii. மீளாய்வாண்டில் கட்டிட பழுதுபார்த்தல்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 413,813 தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) கைத்தொழில் கடன் கொடுத்தோர் மற்றும் கடன் பட்டோர் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.
i. பிரதான அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,682,379 தொகையான பணிகளுக்கான கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் நிதியேற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.
ii. 2014 ஆம் ஆண்டிற்கான 15 பணிகளுக்காக மற்றும் 2016 ஆம் ஆண்டின் 02 பணிகளுக்காக ரூபா 1,478,160 இனால் கூடுதலாக கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
iii. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான சபையின் நிதியத்திலிருந்து நிறைவேற்றப்பட்ட 04 பணிகளுக்காக ரூபா 1,124,521 தொகையினால் குறைவாக கடன் கொடுத்தோர் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பட்டோலைகளில் காணப்படும் மீதிகளுக்கிடையே அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,653,707 ஆகும்.

**1.3.3 பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா 142,284 தொகையான நிலுவை ஏக்கர் வரித் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ரூபா 101,871,295 கூட்டுத்தொகையான காணி மற்றும் கட்டிடங்கள், ரூபா 79,381,293 கூட்டுத்தொகையான மோட்டார் வாகனங்கள் மற்றும் தள்ளுவண்டிகள், ரூபா 6,582,503 கூட்டுத்தொகையான இயந்திர உபகரணங்கள், ரூபா 6,295,184 கூட்டுத்தொகையான தளபாடங்கள் மற்றும் பொருத்திகளுக்குரிய நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிக்கோவை | |
| | i. விதி 185 | பிரதேச சபை பொது நிதியம் மற்றும் கணக்கில் காணப்பட்ட முறையே ரூபா 18,321,533 தொகையான மற்றும் ரூபா 2,934,602 தொகையான மாதாந்த சாரசரி மிகைப் பண மீதியை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | ii. விதி 193 | பாதிடப்பட்ட நிதியேற்பாடு மற்றும் குறை நிரப்பு மதிப்பீட்டுடன் ஒப்பிட்டு ஒவ்வொரு வருமான மற்றும் செலவின விடயத்தின் கீழான மிகைகள் அல்லது பற்றாக்குறைகள் தொடர்பான விடயங்களை தெளிவுபடுத்தும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றிக்கை | 2016 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான பத்து வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,344,124 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,335,236 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 16,008,888 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் மொத்த மீண்டெழும் வருமானத்தில் 68 சதவீதமான உயர்வான பெறுமானத்துடனான செலவினங்கள் காணப்பட்டதுடன், அது நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்திகரமான நிலையொன்றல்ல என்பதை பிரதிபலித்தது.

(ஆ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் சுயமாக ஈட்டப்பட்ட வருமானத்தின் அளவினை மிகைத்து கவனத்திற் கொள்ளக்கூடிய அளவில் மீண்டெழும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், வருமானத்தின் உதவி கிடைத்திருக்காவிடின் சபையின் வருமானத்தில் எந்த விதத்திலும் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்ய முடியாத நிலையொன்று உருவாகி உள்ளமையும் செலவினத்தை கட்டுப்படுத்தல் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதையும் காண்பித்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டினுள் வருமானம் சேகரித்தலின் செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 48,740,594 ஆக இருந்ததுடன், அவற்றுள் ரூபா 23,061,611 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் சேகரித்தலிலான செயன்முன்னேற்றம் 47 சதவீதமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெற வேண்டிய வருமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 89,334,602 ஆக இருந்ததுடன், அவற்றுள ரூபா 40,228,604 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிடுவதிலான செயன்முன்னேற்றம் 45 சதவீதமாக இருந்தது.

#### 2.3.2 வீதவரியும் வரியும்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவிற்கமைய சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் வீதவரியினை அறவிடக்கூடிய ஆதனங்கள் இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு வரியினை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.3 குத்தகை வாடகை

சபைக்குச் சொந்தமான ரன்ன ஜீ மற்றும் யாயவத்தயில் அமைந்தள்ள மூன்று கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியின் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின்

இறுதியில் உள்ளபடியாக ரூபா 1,118,305 தொகையான நிலுவை மீதிகள் காணப்பட்டன. இந்த நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக 1987 இன 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159 (1) பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வியாபார வரி**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக சபைக்கு அறவிடப்பட வேண்டிய வியாபார வரிகளின் கூட்டுத்தொகை ரூபா 224,600 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(4) ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக நீதிமன்ற தண்டப்பணத்திற்காக ரூபா 2,084,688 தொகையும், முத்திரைக் கட்டணங்களுக்காக ரூபா 70,382,045 தொகையும் பெற வேண்டியதாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

**3.1.1 ஆதன கடன் வரியினை மீளளிப்பு செய்தல்**

2014, 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களுக்குரிய ரூபா 22,533 கூட்டுத்தொகையான ஆதனக் கடன் வட்டியினை மீளளிப்புச் செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.2 வீதி அதிகாரச்சட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய பீஈ/01/01 ஆம் இலக்க மின்வலு மற்றும் வலுச்சக்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கை மின்சார சபைக்கு விண்ணப்பித்து முறைமைப்படுத்திக் கொள்ளாமையால் சபையின் நிதியத்தினால் பராமரிக்கப்படும் 2300 வீதி விளக்குகளில் 317 வீதி விளக்குகளுக்காக மாத்திரம் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

**3.1.3 செயலற்ற வங்கிக் கணக்குகள்**

2001 ஆம் ஆண்டு முதல் ரூபா 11,594 தொகையான மீதியுடனான செயலற்ற வங்கி நடைமுறைக் கணக்கொன்று நிலவியது.

**3.1.4 பொருள் மெய்மையாய்வு**

2007 ஆகஸ்ட் 17 ஆந் திகதி உள்ளூராட்சி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 150,000 பெறுமதியான கொங்கிறீட் கலவை இயந்திரம், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வின் போது பற்றாக்குறையான இருப்பு விடயங்களாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் 2017 யூலை 31 அந் திகதி வரையிலும் மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.5 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பாவனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 04 வாகனங்களின் உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த 14 மண்வெட்டிகள் எவ்வித பயன்பாட்டிலும் ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) நிறுவனத்திற்குச் சொந்தமான இரு வாகங்கள் சில வருடங்களாக விளைவற்றுக் காணப்படுகின்ற போதிலும், அந்த வாகனங்களை பழுதபார்த்து பாவனைக்குட்படுத்துவதற்கு அல்லது உரிய முறையில் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கீரிகல பிளிசறு செயற்திட்ட வீதியினை அச்சுக் கல் பதித்து தயாரித்தல் (மூன்றாவது கட்டம்) ரூபா 1,987,153 தொகையான பணத்திற்கு 2015 நவம்பர் 24 ஆந் திகதி பிரதேச விவசாய அமைப்பொன்றிற்கு கையளிக்கப்பட்டு பணிகள் நிறைவடைந்த பின் ரூபா 1,790,377 தொகையான ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதிப்பீட்டின் வேலை விடயம் 02 இன் கீழ் வீதிக்கு மேலாக கிறவல் மண் கொண்டு வந்த விசிறப்பட்டு வீதி செப்பனிடும் இயந்திரத்தின் மூலம் செப்பனிடுவதற்காக 63 $M^3$ இற்காக ரூபா 55,374 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த வேலை விடயம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்படவில்லை.

(ii) கொடுப்பனவு அறிக்கைகளின் பிரகாரம் 280 மீட்டர்கள் நீளமான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பௌதீக பரிசோதனைகளுக்கமைய வீதியின் பூர்த்தி செய்யப்படாத 4.6 மீட்டர்களுக்காக ரூபா 32,784 தொகையான பணம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) நிர்மாணிக்கப்பட்டிருந்த வீதியின் மேற்புர தோற்றம் நலிவான நிலையில் காணப்பட்டதுடன், இழைக்கப்பட்டிருந்த அச்சுக்கற்கள் இலகுவாக உடையக்கூடிய கற்களாக இருந்தமை, வீதியின் இரு புறமும் உள்ள கொன்கிறீட் வேலிகள் அச்சுக் கற்களுடன் மிகவும் சரியாக பொருந்தியிராமை மற்றும் வீதியில் பல்வேறு இடங்களிலும் கீழிறங்கியிருந்தமை போன்றவற்றால் பணிக்காக செலுத்தப்பட்ட பணத்திற்கு உரிய விளைதிறனொன்று கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபையின் நிதியத்தின் கீழ் மேற்படி பணியின் முதற் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டங்களுக்காக ரூபா 1,000,000 தொகையான இரு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பணி நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன், அளவைகளை பரிசோதனை செய்த போது பூர்த்தி செய்யப்படாத 47.12 கன மீட்டர்களுக்காக ரூபா 107,749 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 பதவியணியினர் முகாமைத்துவம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய 03 பதவிகளின் 04 வெற்றிடங்கள் மற்றும் 07 பதவிகளின் 18 மிகைகள் நிலவியமையால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகையான பதவிகளை முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 திண்மக்கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குப்பைகளை கொட்டும் நிலப்பிரதேசத்தை சுற்றிலும் பாதுகாப்பு வேலியொன்று நிர்மாணிக்கப்பட்டிராததுடன், அந்த காரணத்தால் குப்பைக் கிடங்கிற்கு கால்நடைகள் மற்றும் ஏனைய விலங்குகள் உட்புகுந்திருந்தன.

(ஆ) எறியப்பட்டிருந்த பிளாஸ்டிக், கண்ணாடி, மட்பாண்டங்கள் மற்றும் ரின்களில் நீர் தேங்கியிருந்ததுடன், அதன் மூலம் ஈ மற்றும் நுளம்புகள் உள்ளடங்கலாக நோய்களை பரப்பும் பல்வேறு கிருமிகள் உற்பத்தியாவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(இ) சேகரிக்கப்பட்ட கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டெருவினை உற்பத்தி செய்தல், ஆரம்பிக்கப்பட்டிராததுடன், கொட்டப்பட்டிருந்த கழிவுகளின் ஒரு பகுதி மாத்திரம் மண்ணால் மூடப்பட்டிருந்தது. எஞ்சிய கழிவு சூழலுக்கு விடுவிக்கப்பட்டிந்தமையால் சுற்றுப்புற சூழலுக்கு சேதம் ஏற்பட்டிருந்தது.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

வருடாந்த பாதீட்டின் மூலம் 51 செலவின விடயங்களுக்கா ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 52,765,000 கூட்டுத்தொகையான மொத்த நிதியேற்பாடும் எஞ்சியிருந்ததுடன், 05 வருமான விடயங்களின் பாதகமான விலகல்களின் கூட்டுத்தொகை ரூபா 79,491,871 ஆக இருந்ததுடன், அந்த பெறுமதி 39 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தமையால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிர்வாகம்